வகையில் பணிகள் நடைபெற்று வருவதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

சொந்தக் கட்டடம்

***3688—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், சௌந்தரபாண்டியபுரத்திலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், தெற்கு கள்ளிக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 384 குடும்ப அட்டைகளுடன் சௌந்தரபாண்டியபுரம் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர ஏதுவாக இடமும், நிதியும் ஒதுக்கக் கோரி, திருநெல்வேலி மாவட்ட திட்ட அலுவலர் அவர்களுக்கு 14–2–2013 அன்று கடிதம் எழுதப்பட்டு, மீண்டும் 21–10–2013 அன்று நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்திடமிருந்து பதில் வரும்பட்சத்தில், போதிய நிதி ஒதுக்கீடு பெற்ற பின்னர் இந்நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இகத்தினால் தமிழ் காக்க இறைதந்த கொடையாக, இயலார்க்கு வழிகாட்ட இலைதந்த விடையாக, சதிகளை சம்ஹாரம் புரிகின்ற சக்தியாக, சந்தியா தாய் ஈன்ற பகுத்தறிவு பக்தியாக, (மேசையைத் தட்டும் ஒலி) வல்லரசும் வாழ்த்துகிற நல்லரசு நாயகமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கும் வழி பார்த்துக் காத்திருக்கும் வருங்கால பாரதமாக, (மேசையைத் தட்டும் ஒலி) நதி உரிமை காத்திட்ட நாடுபோற்றும் மீட்பராக, நற்றமிழ் நாட்டுக்கு நல்லதோர் மேய்ப்பராக, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்னும் சத்தியத்தில் வாழ்கிற சரித்திரமாக, சாதனையாக (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கும் வாழும், ஆனால் இனி தெற்குதான் ஆளும் என்னும் வரலாறு படைத்திட (மேசையைத் தட்டும் ஒலி) காலமும், கடவுளும் கழகத்தின் வழியாய் தந்திருக்கும் எங்கள் தவமே, வரமே, தமிழகத்தின் அருந்தவமே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே, வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தருவேன் என்று உறுதியளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

முற்பகல் 10—25

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட புத்தூர் ஊராட்சியான நாராயணபுரம், பொம்மிநாயக்கன்பட்டி மற்றும் கச்சகட்டி, குற்றாலம்பட்டி ஆகிய பகுதிகளில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்தான் நடத்துகின்றன. இந்தச் சங்கத்தினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அந்தச் சங்கத்திற்கு இடம் இருக்கும்பட்சத்தில், அந்தச் சங்க இடத்தில் கட்டுவதற்கான வாய்ப்பு வசதிகள் உண்டு. இல்லாதபட்சத்தில் மாவட்ட முகமை நிதியிலிருந்தோ, ஊராட்சி நிதியிலிருந்தோ அல்லது அவர் விரும்பினால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்தோ கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

50—

சாலையை அகலப்படுத்துதல்

***24657—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை—சூராணம் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை—சூராணம் சாலையை வரும் காலங்களில் போக்குவரத்து செறிவிற்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.